பிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறதே, அப்படிப்பட்டவர்களுக்குச் சிறை தண்டனை கொடுப்பது போன்ற நோக்கம் இந்த சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது இன்னும் ஆராய்ச்சி நிலையில் இருக்கிறது.

Commercial Tax Department.

* 373 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the amount of revenue realised through he checkpos s of the Commercial Tax Department from the year 1965 to 1967 ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Rs. 43,26,284·53.

திரு. எஸ். இராமச்சந்திரன் : 'Commerical Tax is the main source of income'. நம்முடைய சர்க்கார் பதவி ஏற்றதற்குப் பிறகு, இந்தத் துறையிலே அதிக வருவாய் வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு 'upward trend' இருக்கிறதா ? அது மட்டுமல்லாமல், கள்ளக் கணக்குகள் வைத்து, இதிலே பெரிய ஏமாற்றங்கள் எல்லாம் நடைபெறுவதால், அதைப் பற்றி ஆங்காங்கு சென்று, உடனடியாகப் பிடித்து, நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தத் துறையில் அரசாங்கம் சுறுசுறுப்பான அக்கறை செலுத்தி வருகிறது. ஆனால், வீடுகள், மற்ற இடங்களில் எல்லாம் சோதனை போட்டதற்குப் பிறகு, சுப்ரீம் கோர்ட்டில் சில தாவாக்கள் இருக்கிற காரணத்தால், சட்ட சம்பந்தமான சில பிரச்சினைகள் முடிவாக வேண்டியிருக்கிற நிலைமைகளில் இவைகளில் வேகமாகக் காரியங்களைச் செய்ய முடியவில்லை.

Collection of kist in inam villages.

முற்பகல் 10–00 * 374 *Q.*—THIRU A. BALASUBRAMANYAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have not appointed officials to collect kist from the ryots of inam villages in Pudukkottai Division taken over by the Government under the Inam Abolition Act, 1963 ;

(*b*) whether it is also a fact that even the kist has not been determined so far ;

(*c*) whether any representation has been received by the Government on the large number of suits filed by inamdars against the poor ryots taking advantage of non-appointment of officers and non-determination of kist ; and

(*d*) if so, the action taken or the decision of the Government in the matter ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN :

(*a*) No. The Tahsildars of the taluks and the Deputy Tahsildars in charge of the sub-taluks have been appointed to manage the inam estates within their respective jurisdiction with effect from the notified date. It is their responsibility to collect the kist through the village officers concerned.